உ

சிவமயம்.

# வேதாந்தப் பள்ளு



திருவாதி

ஸ்ரீசாரதாவிலாஸ அச்சுக்கூடம்.

1896.

விலை அணா 1.

Copy-Right Registered.

15043
9002
15043
(9002)

உ

சிவமயம்.

சிவகணபதிதுணை.

# வேதாந்தப்பள்ளு.

இஃது

மலையாளசமஸ்தானம் செங்கோட்டை

ஆவிடை அம்மாளால்

இயற்றப்பட்டு

திருவாதி, புஷ்பமண்டபத்தெரு, ஏஜண்டு

நா. வைத்திநாதபாரதியாராலும்

இராமஸ்வாமிதீக்ஷிதராலும்

திருவாதி

"ஸ்ரீசாரதாவிலாச அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பட்டது.

1896

விலை அணா 1

Copy-Right Registered.

உ

சிவமயம்

சிவகணபதிதுணை.

# வேதாந்தப்பள்ளு.

## காப்பு. விருத்தம்.

சாந்தகர ஸிம்மரெனும் ஸர்க்குருவைப் பணிந்து, சரஸமுடன் வேதாந்தப் பள்ளைநான் பாட, சாரதியே பாரதியே சாரங்கி சாமளியே, சந்ததமும் நாவில்வீணை யாடவந்த மயிலே, கோமளமே சாமளமே கொந்தளமே குயிலே, குறைபடாது வாராமல் நிறைவேற்ற வேணும், போனகமும் பானகமும் பொங்கல் புளியமுதும், ஆனபடிநான்படைப்பேன் ஆனைமுகத்தோனே.

## பிர்மத்திலிருந்து ஜீவேசுவரன் உத்பத்தி.

தன்னுடைய புத்திரன்சொல் அன்னைஉகந் தாப்போல், என்னுடைய பிழைபொருத்து முன்னடத்தவேணும், அபத்சமிருந் தாலும்வே தாக்ஷாத்தைத்தவிர, அதல்லாம வில்லையென அறியும்பெரியோர்கள், அண்டபிண்ட லோகமெல்லாம் அக்ஞானத் தாலொடுங்கி, அகிலஜகம் அத்தனையும் பிரளயந்தனில் மூழ்கி, இப்படியே வெகுகாலம் இருக்கிறபோது, வஸ்து இக்ஷணத்தாலொரு மாயைவந்து பிறந்தான், வந்ததொரு மாயைதன்னில் மகதத்துவமாகி, மதாங்கா

ரத்தோடதி மூன்றுகுணமாச்சு, தன்மாத்திரை யோடேபஞ்ச பூதங்களும்கூடி, க்ஷணிகத்திலே சூக்ஷ்ம தேகமுண்டாச்சு, அதிஷ்டான வித்தையிலே பிரதிபெலமுங் கூடி, அடவுடனேஜீவனும் ஆகியவதரித்தான், பரப் பிரும்மமெனும் மாயைதன்னில் பிரதிபலமுங்கூடி, பாங்குடனே ஈசுவரனு மாகியவதரித்தான்.

### விருத்தம்.

தோன்றியோரந்தர்யாமி ஜெகத்சிருஷ்டிபண்ணவெண்ணி
ஜீவப்பள்ளனைப்பார்த்தீசன் சேதிகள்பலவுஞ்சொல்வான்
பிரளயாக்கினியினாலே பஸ்மமாய்ப்போச்சுலோகம்
பயிரில்லாத்தாழ்வினாலே பரிதாபம்மெத்தக்கொண்டு,

ஜெசம்பயிரேறவெண்ணி பிரபனுமுரைக்கலுற்றான்
பரஞ்சதோர்பரமனோடே பள்ளனோருத்திரஞ்சொல்வான்
காலமோபிக்கிப்போச்சு கடுகிவெள்ளாமைசெய்ய
கண்ணுறையடைக்கவேணும் காலதுவெட்டவேணும்,

மாடதுமரிக்கவேணும் மரமதுவெட்டவேணும்
பேடதுபிடைக்கவேணும் பிரம்படிதட்டவேணும்
ஊழியக்கொத்தார்கூட்டம் உலகினிலொருவரில்லை
சகாயமாவாருண்டானால் சாதிப்பேனென்றான்பள்ளன்,

ஆளைநாமழைத்துத்தாரோம் அதுக்குநீ அஞ்சவேண்டாம்
சகாயமாயிருந்துவாரம் தடுத்துநீ முடக்கவேண்டாம்
சமாதியிலிருந்தீசன் தியானங்கள் செய்யலுற்றான்,
சதாசிவன் மகேச்சுரன் ருத்ரன் சதுர்முகன்சக்ரபாணி,

பார்வதிவாணிலெட்சுமி பராசக்திபத்ரகாளி
அனுகூல இச்சாசக்தி ஞானசக்திகிரியாசக்தி
சகலரும்பிராப்தமானார் அரைக்ஷணமாத்திரத்திற்குள்ளே
ஆளைநாம்வருத்தித்தந்தோம் அழைத்துநீவேலைகொள்ளு,

ஆஜ்யம் ஹவிசுமந்தரம் அக்ஷரப்புரோடாசத்தால்
அக்கினிமுகமேநடத்தி அனைவருக்குந்திருப்திபண்ணி
விருத்திகள்வேறுபட்டு வேலைகள்முடக்கமற்று
கொத்தசம்நித்தியம்போட்டு ஒருகுழிநிலந்தரிசில்லாமல்,

அற்றைக்கும்பருவம்பார்த்து அரமனைக்குறைவில்லாமல்
அடிக்கடிவளவில்வந்து அன்றன்றுசேதிசொல்லி
ஆதாரதேவதைசைய அவஸ்தைகள் மூன்றும்பெற்று
ஆசைக்கண் ஆத்துப்போக்கை ஆண்டுகொள்மானியமாக,

தேகத்ரயமென்னும்வீடதனில் ஸ்திரமாகவிருந்துகொண்டு
கோசங்களான நல்ல கொடுமுடிமேடைமேலே
அஞ்சனமையால்லோகம் அமட்டுவானவித்தைவித்தை [டு
வஞ்சகக்காரபள்ளனிரண்டு வைப்பையும்வைத்துக்கொண்

கொஞ்சியே விஷயபோகம் குறைவறபுசித்துநித்யம்
அடிக்கடிவேஷம்மாறி அபிமானியாயிருக்கவேணும்
கர்த்திருத்வம்ஜீவன்மேலே கட்டளையிட்டுப்போட்டு
அகர்திருத்வமாயீசன் அதிகாரியாய்ப்பார்த்திருந்தான்
முத்திரைவாங்கிஜீவன்முடிமேலேசூட்டிக்கொண்டு
நாயன்கட்டளையிட்டவேலை கடுகினில்முனைந்துபோனான்.

## பள்ளு.

தலையைமுடிந்து கொடியைவரித்து தாய்ச்சீலைகட்டியிருக்கியே - பள்ளன் - தாய்ச்சீலைகட்டி யிருக்கியே

சதிரான நெற்றியில் வெண்ணீறு பூசியே தாக்கியே கஞ்சி குடித்தவன் - பள்ளன் - தாக்கியேகஞ்சிகுடித்தவன்

பருத்த மண்வெட்டி தொடுத்துத் தோளிலே பாக்கு வெற்றிலை பிடித்தவன் - கையில் - பாக்குவெற்றிலைபிடித்த

பழக்கம்பேசியே பள்ளியனோடே சிறக்கிவேலைக்குப் போகிறான - பள்ளன் - சிறிக்கி வேலைக்குப்போகிறான்

அடவுடனைந்து பூசம் பிரித்து ஆக காலுடன் கலந்தவன் - பள்ளன் - ஆககாலுடன் கலந்தவன்.

ஆகாசம் வன்னி வாயுவாகிற ஆடு பசுவும் கடத்தினான் பள்ளன் - ஆடுபசுவும் கடத்தினான்,

அப்புவாகிற மடையைத்திறந்து அண்டமீரேழுலோகமும் - ஏக - மண்டமீரேழுலோகமும்,

அங்கங்கேகவில் உடைத்துப்போகாமல் அடைத்துத் தண்ணீரைப் பாய்ச்சினான் - பள்ளன் - அடைத்துத்தண்

கலையாகிற கலப்பைபககக்கால் சவருடன்கொழு எடுத்தவன் - பள்ளன் - கவருடன கொழு எடுத்தவன்,

காலமாகிற காளையைப்பூட்டி கருத்துடன் உழத்தொடங்கினான் - பள்ளன் - கருத்துடன் உழத்தொடங்கினான்,

வேலையாகிற மேளிபிடித்து மூன்றுமூன்றுசாலோடியே - டள்ளன் - மூன்றுமூன்றுசாலோடியே,

வீருடன்பள்ளன் ஏழுழவையும் உழுதுபுழுதி யாக்கினான் - பள்ளன் - உழுது புழுதியாக்கினான்,

சீருடன்சுக்ல சுரோணிதத்துடன் ஜெனித்தமழைகள் பொழியவே - எங்கும் - ஜெனித்த மழைகள் பொழியவே,

ஸ்திரீபுருஷாள் சையோகமாகிற ஜீவபட்டமும் வாய்த்தது - நல்ல - பட்டமும்வந்து வாய்த்தது,

வாணியாகிற சத்தியுடனே விராட்டிலே அந்தர்பூசமாம் - பிரம்ம - விராட்டிலே அந்தர்பூசமாம்,

வாக்குடனே சிருஷ்டிவல்லப மாகிவேலைக்குப் போனான் - பள்ளன் - ஆகிவேலைக்குப் போனான்,

இரஜோகுணத்துடன் கூடிபிரம்மமும் நிமித்தியகாரணமாகியே - எங்கும் - நிமித்தியகாரணமாகியே,

நெரத்தி எடுத்து எழுவகுப்பாய் நிகிலமும்விரை பாவினான் - பள்ளன் - நிகிலமும்விரை பாவினான்,

ஜகத்துவிசித்ர மாகவேயெங்கும் சீருடன்முளை யானபின் - பயிர் - சீருடன்முளை யானபின்,

சிவசக்தியுடனே ஸ்ரீ ஹரி பள்ளன் செய்தனில் வந்து தோன்றினான் - பள்ளன் - செய்தனில்வந்து தோன்றினான்,

கொப்புடனேயஸ்தி ஜாயத என்னும் கொம்புமரத்தை வளைத்தவன் - அந்த - கொம்புமரத்தை வளைத்தவன்,

குறிப்புடனே வர்த்ததேயென்னும் குறுமுனையி லாடுகேட்டினான் - பள்ளன் - குறுமுனையி லாடுகேட்டினான்,

பரிணாமதை அபேக்ஷதையென்னும் பரிபருவமுமான பின் - பயிர் - பரிபருவமுமானபின்,

பாண்டவன்தூதன் பார்த்தப்பள்ளியை பரிவுடன்வேலைக்கேவினான் - பள்ளன் - பரிவுடன்வேலைக்கேவினான்.

அயனார் பள்ளியும் அரனார் பள்ளியும் அரிமகேசவரர் பள்ளியம், அவித்தை வித்தை ஸதாசிவம்பள்ளி அனைவரும் வந்துகூடினார் - பள்ளி - அனைவரும்வந்து கூடினார்.

வளர்ந்தகூந்தலை மடித்திச்சொருகி வாரியெண்ணெயைப்பொத்தியே - தலை-வாரியெண்ணெயைப் பொத்தியே,

வளர்ந்தகாதிலே வளையந்தூக்கி வச்சிரதாடகம் சாத்தினாள் - பள்ளி - வச்சிரதாடகம் சாததினாள்,

வரிகழுத்திலே மலர்கள் மஞ்சணை வாரிநிறையப் பூசியே - பள்ளி - வாரிநிறையப் பூசியே,

வளர்ந்தகொங்கைமேல் பாசிபவளம் வகைவகையாகச் சாத்தினாள் - பள்ளி - வகைவகையாகச் சாத்தினாள்,

ஹஸ்தகடகம் கொட்டுநெளியும் அடைக்கைவளையு மிறுக்கியே - பள்ளி - அடிக்கைவளையு மிறுக்கியே,

ஐந்துவிரலுக் காழிமோதிரம் அடவடவாகச் சாத்தினாள் - பள்ளி - அடவடவாகச் சாத்தினான்,

சாதிலிங்கமும் சந்திரக்காவியும் சரிகைத்துப்பட்டிச் சேலையும் - பள்ளி - சரிகைத்துப்பட்டிச் சேலையும்,

சாயக்கம்பியும் தங்கச்சுழியும் சகலாத்துப்போர்வைச் சேலையும் - பள்ளி - சகலாத்துப் போர்வைச் சேலையும்.

எழுத்துக்கருப்பு மிக்கிரவாளியும் இழைபாயிரம்பெற்ற சேலையும் - பொன் - ஆயிரம்பெற்ற சேலையும்,

இணிக்கிக்கொசாம் இடுப்பிலொசத்தி இடைதவளாமலுடுத்தினாள் - டள்ளி - இடைதவளாம லுடுத்தினாள்,

முத்திரைக்கையால் சுத்திவெற்றிலே அத்தனைபேரும் ஒதிக்கிறாள் - பள்ளி - அத்தனை பேரும் ஒதிக்கிறாள்.

வையடமீரேழும் மடக்கிக்கைவல்யம் கொள்ளும் மனத்தாள்முழியிலே- ப்ள்ளி -கொள்ளும்மனத்தால் முழியிலே

வையமுழுது மைதனையிட்டு மயக்கப்பொட்டொன்று சாத்தினாள் - பள்ளி -மயக்கப்பொட்டொன்று சாத்தினாள்,

வளர்ந்தஸ்தனங்கள் பாரம்பொறாமல் வணங்கியொடுங்கித் துவளவே - இடை - வணங்கியொடுங்கித் துவளவே,

மதயானைபோலவே மந்தகெவன மாகிவேலைக்குப்போகிறாள் - பள்ளி - ஆகிவேலைக்குப் போகிறாள்.

நத்தைநண்டுகள் பிடிக்கப்பள்ளியும் ரெத்தினகலசந் தூக்கியே - நவ - ரெத்தினகலசந் தூக்கியே,

நாட்டுவெளப்பம்பாடியாடி நாயன்வேலைக்குப்போகிறாள் - குரு - நாயன்வேலைக்குப் போகிறாள்.

தங்கக்கூடையும் செம்பொற்சொளகும் தங்கமார்பிலிடுக்கியே - பள்ளி - தங்கமார்பிலிடுக்கியே,

தாறுமாறுமாய் லீலைகள்பேசி ஜாலக்காரிகள் போயினாள் - பள்ளி - ஜாலக்காரிகள் போயினாள்

குளக்கரையிலே கொம்பைவளைத்துக் கோலத்தூளியைத்தூக்கியே - பள்ளி - கோலத்தூளியைத் தூக்கியே,

கொடுத்துமுலையைக் கத்தும்பிள்ளைக்கு கோகிலம்போற்குரலாட்டினாள்-டள்ளி-கோகிலம்போற்குரலாட்டினாள்

## தாராட்டு.

வயல்தனில் தொம்பைகட்டி - வண்ணமலர் சண்டாக்கித் தொட்டில்கட்டி - அழும்பிள்ளைக்கு முலைகொடுத்து - அரவணைத்து முத்தமிட்டு,

தங்கச் சிலம்பணிந்து - பொன்னரிவாள் தோளில்வைத்து - அய்யனார் தலைவருக்கு - நாள்கதிர் கொள்ளவந்தானோ,

ஜீவப் பள்ளனய்யர் தலைவர்க்கு சொந்தவடியானோ - டரமனபரா சக்திபரம னடியானோ - ஆங்காரிபெத்தெடுத்த ஆனைமணிக் குஞ்சரமோ,

சிங்காரிபெத்தெடுத்த சிங்கப்பெரும்புலியோ - சதுர்தேச புவனமெல்லாம் - சொந்தக் குடும்பனிவன் தன்னுதெனவும், * * * * *

## பள்ளு.

அழுதபிள்ளைகள் உறக்கமானபின் அனைவரும் வயல் இறங்கியே - பள்ளி - அனைவரும் வயல் இறங்கியே,

அன்னம்போலே நடந்து நடந்து ஆருயிந்து களைகள் பறிசெய்தாள் - பள்ளி - ஆருயிந்துகளைகள் பறிசெய்தாள்,

குழந்தைய முத குரல்கள்கேட்டு கொங்கை இரங்கிப் பெருகியே - இரு - கொங்கை இரங்கிப் பெருகியே,

கோலக்கையா லரைக்கி யரைக்கி குனிந்து களைகள் பறிசெய்தாள் - பள்ளி - குனிந்து களைகள் பறிசெய்தாள்,

நேரம்போச்சென்று செய்தனைவிட்டு சீக்கிரம் கரையேறியே - பள்ளி - சீக்கிரம் கரையேறியே,

சிறும்பிள்ளைக்கு முலையைக்கொடுத்து சோலைவில் போயினள் — பள்ளி - சோலைவில் போயினள்,

அவரவருடை பிராப்தபோகத்தால் அங்கங்கே விளை வானபின் - பயிர் - அங்கங்கேவிளை வானபின்,

ஆறுசாஸ்திரம் நாலுவேதத்தால் அசைக்கப் போகா தே கட்டினான் - வேலி - அசைக்கப்போகாதேகட்டினான்

பாபதோஷாதி நிஷிதங்களென்னும் பட்டிபன்றிகள் மேயாதே - பல - பட்டிபன்றிகள்மேயாதே,

பலசுருதிபுராணத்தால் பாரிகைபோட்டு பதனமாக வேகல்பித்தான் - பள்ளன் - பதனமாகவே கல்பித்தான்;

அநிர்த்தியங்களென்னும் ஆய்ல்குருவி ஆயாதேவந்து பயிர்தனை - பயிர் - ஆயாதேவந்து பயிர்தனை,

அங்கங்கேமனு வசனங்கள்பாடி ஆயலாயலென்றோட் டினான் - பள்ளன் - ஆயலாயலென்றோட்டினான்,

அஷ்டமூர்த்தியை கட்டளையிட்டு மட்டுமிதமில்லாம லே - பள்ளன் - மட்டுமிதமில்லாமலே,

அஷ்டதிக்கிலும் பரிபாலனம்பண்ணும் முத்திரையிட்டு அனுப்பினான் - பள்ளன் - முத்திரையிட்டு அனுப்பினான்

தந்தால் லோகத்து உசிதமாகவே சதுர்வேதபூத கிரா மமாம் - எங்கும் - சதுர்வேதபூத கிராமமாம்,

சராசராத்மா ஆகிலோகங்கள் சாகோபசாகைக ளாச் சுது - எங்கும் - சாகோபசாகைக ளாச்சுது,

மலடிவர்க்கத்தின் மாயைகுணத்தால் மட்டிட்டுக்கா ணக்கூடாமலே - ஜக - மட்டிட்டுக்காணக்கூடாமலே,

வளைச்சுவளைச்சு மலேபும்சர்ப்பம்போல் வஸ்துவிலா ரோபமாச்சுது — ஜெகம் - வஸ்துவில் ஆரோபமாச்சுது,

சேட்டுமெந்த மகேசுரன் பள்ளன் தேவிப்த்திர காளியுடன் - பள்ளன் - தேவிபத்திர காளியுடன்,

சிக்கிரம் அடிச்சம்பாரம்போட்டு திரோதானம்பண்ணத்தோன்றினன் -பள்ளன்- திரோதானம்பண்ணத்தோன்றி

பார்த்துமந்த மகேசுரப்பள்ளன் பராசத்தியுடன் கூடியே - பள்ளன் - பராசத்தியுடன கூடியே,

பழையபடிச்கு அனுக்கிரகித்தவன் படியளக்கவே தோன்றினன் - பள்ளன் - படியளக்கவேதோன்றினன்,

இன்னும்ஜென்மாதி இன்னும் ஈசனும் எத்தவினைவைவினைத்தவன் - பள்ளன் - எத்தவினைவைவினைத்சவன்,

ஏரைப்பூட்டி தரிசையுழுது எங்கிலுங்தொளி ஆக்கினன் - பள்ளன் - எங்கிலுங்தொளி ஆக்கினன்,

அவரவருடை ஆரத்தபோகத்தால் ஆவரங்குழை பரப்பியே - பள்ளன் - ஆவாரங்குழை பரப்பியே,

ஆரப்பொட்டுத் தரிசலடிச்சு அவ்வடிநடத் தோன்றினன் - பள்ளன் - அவ்வடிநடத் தோன்றினன்,

கர்ம்மசேஷாதி நாத்தைசப்பரித்து காலம் பிந்தாமல் பள்ளனும் - அந்த - காலம் பிந்தாமல் பள்ளனும்,

கட்டைத்திரட்டி பள்ளிசள்தலைமேல் பொட்டுப்பொட்டென எத்தினன் - பள்ளன் - பொட்டுபொட்டென எத்,

பம்மிபள்ளிகள் பாரம்பொருதே உன்னித்தலையைத் தாக்கியே - பள்ளி - உன்னித்தலையைத் தாக்கியே,

பையப்பைய நடந்துநடந்து பழக்கம்பேசியே போயினள் - பள்ளி - பழக்கம்பேசியே போயினள்,

கொன்னப்பூவிளம் கொங்கைகள்ரெண்டும் குலுங்கிக் குலுங்கியசையவே - கொங்கை - குலுங்கிக்குலுங்கியசை,

கொணங்கி கொணங்கி சிரிச்சு சிரிச்சு கூட்டங்கூட்டமாய்ப்போயினாள் - பள்ளி - கூட்டங்கூட்டமாய்ப்போயினாள்,

கமலத்தினில் இவிலைகள் போலே கனிமுத்துவேர்வை இளம்பியே - கொஞ்சம் - கனிமுத்துவேர்வை இளம்பியே

கட்டைதிட்டினு போட்டுப்பள்ளியும் களையோடிளைப் பாறினாள் - பள்ளி - களையோடிளைப்பாறினாள்,

அரக்குக்கள்வாங்கி குடித்தனைவரும் அடைகாய்வன்னலை ஒதுக்கியே - பள்ளி - அடைகாய்வன்னலை ஒதுக்கியே

வறியமஞ்சளைப்பூசி எண்ணெயை அனைவரும்வாரிப் பொத்தினாள் - தலை - அனைவரும்வாரிப் பொத்தினாள்,

கொம்புக்கிளிபோல் குனிந்து குனிந்து கூருடன்முடி எடுத்தவள் - பள்ளி - கூருடன்முடி எடுத்தவள்,

குருநாதநாயனைப் போற்றிக் கும்பிட்டு குலவையுடனே நடலுற்றாள் - பள்ளி - குலவையுடனே நடலுற்றாள்,

வர்ணாசிரமங்கள் ஜாதிநாத்துகள் வகைவகையாக எடுத்தவள் - பள்ளி - வகைவகையாக எடுத்தவள்,

வையமுழுதும் நடுகைகளிட்டு பையக்கரையிலேறினாள் - பள்ளி - பையக்கரையிலேறினாள்,

கைதட்டிக்குயில்போல் குலவைகளிட்டு கண்ணால் பள்ளனைச்சருவியே - கடைக் - கண்ணால் பள்ளனைச்சருவி

கண்டுபொழுது நேரம்போச்சென்று கலதியுடனே போயினாள் - டள்ளி - கலதியுடனே போயினாள்,

பஞ்சமுகமும் பஞ்சசக்தியும் பஞ்சாக்ஷரமும் கூடியே பள்ளன் - பஞ்சாக்ஷரமும் கூடியே,

பஞ்சபிர்ம்மமும் பஞ்சகிர்த்தியமும் பண்ணியே விளையாடினான் - பள்ளன் - பண்ணியே விளையாடினான்,

அனேகநானா யாபாஸ பள்ளன் அவித்தை கைவசமாகியே - பள்ளன - அவித்தைதகைவசமாகியே,

அரிஷட்வர்க்க புத்திரர்களாலே அபார சமுசாரமாகினான் - பள்ளான் - அபாரசமுசாரமாகினான்,

ஈஷணையென்னும் கிடைகளைச்சார்த்தி இராப்பகல் நித்திரையில்லாமலே - பள்ளன் - இராப்பகல்நித்திரையில்

இகபரமென்னும் ரெண்டுவெள்ளாமை இட்டுவைசுவெச்சு போகினான் - பள்ளன - இட்டுவைசுவெச்சுபோகினான்,

இந்திரியன்தன் வசத்தையடைந்து இந்திராதிபோகத்தை நாடியே - பள்ளான் - இந்திராதிபோகத்தைநாடியே

ஈரேழுலோகமும் கர்ம்மஉழவை உழுது ஒன்றுங்கிட்டாமலே - பள்ளன் - உழுதி ஒன்றுங்கிட்டாமலே,

அஞ்சுவிஷய புஞ்சை உழுது ஆள்படிக்குங்கிட்டாமலே - பள்ளன் - ஆள்படிக்குங்கிட்டாமலே,

அந்தகனாலே பிராணாயாமத்தால் அபகரிப்பள்ளன் என்கியே - பள்ளன் - அபகரிப்பள்ளன் என்கியே,

போரும்போரும்இவனெடுகொள புறைபுறையாளாச்சுது ஜென்மம் - புறைபுறையாளாச்சுதி,

பொருக்கக்கூடாத மடக்கியுழவை வெறுத்து வெளியில் புறப்பட்டான் - பள்ளன் - வெறுத்துவெளியில்புறப்பட்

விவேகம்வந்தபின் விரக்தியடைந்து விட்டு வெள்ளாமை போகத்தை -பள்ளன்- விட்டுவெள்ளாமைபோகத்தை

வீட்டுத் தீவந்து தாக்கினுப்போலே நாட்டமாகியே போகினுன் - குரு - நாட்டமாகியேபோகினுன்,

சத்வித்தைசுற்றதோர் புத்திரர்களாலே சாந்தோபசாந்தாவைத்தேடியே -பள்ளன்- சாந்தோபசாந்தாவைத்தேடியே

சந்ததமும்குரு சமுகம்தேடி சிரவணம்நாடியே போகினுன் - பள்ளன் - சிரவணம்நாடியே போகினுன்,

பள்ளன்போனதோர் சேதியைக்கேட்டு பரமனென்கிற நாயனும் - அந்த - பரமனென்கிற நாயனும்,

பதரிவந்தந்த அவித்தைதன்னுடே சேதிகேட்கவே தோன்றினுன் - பள்ளன் - சேதிகேட்கவே தோன்றினுன்,

## வேறு.

பள்ளிரேபள்ளி எங்கடி போனுன் - பழம்பள்ளியுடன் பாசமாய்ப்போனுன் - பழம்பள்ளியுடன்பாசமாய்ப்போனுன்.

இளம்பள்ளியவனுன்னைப்பிரிந்து - என்டிபள்ளனவளோடேபோனுன் - என்டிப்பள்ளனவளோடேபோனுன்

க்ஷணமாத்திரப்பொழுதன்னைப்பிரிந்து - மறந்துபோன விதமென்னபள்ளி - அவன் - மறந்துபோன விதமென்னபள்ளி. அந்த

வஞ்சகிவித்தைஞானமருந்தால் வசமாகிப்பள்ளன் போனுன்களான்டே - வசமாகிபள்ளன் போனுங்களான்டே,

ஊழிகாலமுமுன்னோடுகூடி உகர்ந்தகர்ந்திருந்ததோ
ர்பள்ளன் - இப்போ - உன்னைவிட்டவளோடேசேர்ந்தஉத்
பாதமென்னசொல்வாய்நீபள்ளி - உத்பாதமென்னசொல்

உபரதிஉபசாந்தாளைத்தேடி உகர்ந்துநாடியே போறா
ங்களாண்டே - உகர்ந்துநாடியேபோறாங்களாண்டே.

தேகாதியென்னும்வீட்டைமறந்து தெரிபட்டுப்பள்ள
னேன்போறான்பள்ளி - தெரிபட்டுப்பள்ளனேன்போறான்
பள்ளி.

திருக்குதிரிச்யாதிவிவேகமறிந்து - திருக்காதிப்பள்ள
ன்போறாங்களாண்டே - திருக்காதிப்பள்ளனபோறாங்களா
ண்டே.

இந்திரியாதிசுகங்களைவிட்டு - என்டிபள்ளனவளோ
டேபோறான் - என்டிப்பள்ளனவளோடேபோறான்.

அனர்த்தபிரந்தாதிகிரந்தியறுந்தி - அகிலசாக்ஷியாய்ப்
போறாங்களாணடே - அகிலசாக்ஷியாய்ப்போறாங்களாண்

நீதானும்போ யிணக்கியழைத்து - சமாதானம்பண்
ணிக்கூட்டிவாபள்ளி - சமாதானம்பண்ணிக்கூட்டிவா.

அவனென்னைக்கண்டாலெரிந்துவிழுவன் - எரிட்டுமு
கம்பாராங்களாண்டே - என்னை - எரிட்டுமுகம்பாராங்க
ளாண்டே.

சரளிபாடிசரசங்கள்பேசி - சருவிமெள்ளஅழைத்து
வாபள்ளி - சருவிமெள்ளஅழைத்துவா.

சிவசச்சிதானந்தபோகத்தைவிட்டுத் - தலை கீழநின்று
ஊம்வராங்களாண்டே - தலை - கீழநின்றுஊம்வராங்களாண

## வேறு.

தகிருதிதிகிருதிதோமென் ருடிஞனே பள்ளன் ஆடிஞனே தானேதானுனேனுமென்று பாடிஞனே.

நானேதன்யன் நானேதன்யனென் ருடிஞனேபள்ளன் நாதமென்னும்வில்லெடுத்துப் பாடிஞனே.

மூலாதாரம்திம்ஸம்பன்னி ஆடிஞனேபள்ள ஞடிஞனே முக்குணம்போய் நிர்குணமென்றுபாடிஞனே

மிருத்யுசிரசுமிதித் தாடிஞனே பள்ள னுடிஞனே மீண்டு ஜனனமத்துப் போயினனே.

தேசகாலவஸ்துக்கடந் தாடிஞனேபள்ள னுடிஞனே திரிபுரபர தேசசூன்ய மாகிஞனே.

பரமானந்த பாதகுரட்டில் ஏறிஞனேபள்ள னேறிஞனே பகடுதன்மாயமெடுத்துப் பாடிஞனே.

அன்னுமின்னுமேகமென்னு மாடிஞனேபள்ள னுடிஞனே ஆபாசக்கூத்தைவிட்டுப் போகிஞனே.

அம்ஸோக அஸ்மியென்றமாடிஞனேபள்ள னுடிஞனே அக்ஞானக் கிரிசமழித்து போகிஞனே.

நானேதன்யன்நானேதன்யனென் ருடிஞனேபள்ளன் நாதமென்னும்வில்லெடுத்துப் பாடிஞனே. * * *

வேதாந்தப் பள்ளு

முற்றிற்று

# விற்பனைக்கு தயார்ராயிருக்கிற புஸ்தகங்கள்

| கிரந்தம். | அ. ப. |
|---|---|
| யோகவாஸிஷ்ட ஸாரம் | 6—0 |
| ஸ்ரீசங்கராசாரியசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய ஸ்ரீ அகிலாண்டேசுவரி அக்ஷரமாலிகை | 1—0 |
| ஸ்ரீபரமசிவஸ்தோத்திரம் ... ... ... | 0—3 |
| ஸ்ரீகுமாரசைலாஷ்டகம் (கிரந்தமும் தமிழும்) ... | 0—6 |

| தமிழ். | |
|---|---|
| அன்பிலாலந்துறை புராணம் வசனம் ... ... | 4—0 |
| வசனசம்பிரதாயக் கதை ... ... ... | 2—6 |
| கவிகுஞ்சரபாரதிகள் வேங்கைக் கும்மி ... ... | 1—6 |
| உடற்கூற்று உண்மைக்கும்மி ... ... ... | 1—0 |
| ஆவுடையம்மாள் பாடிய வேதாந்தப்பள்ளு ... | 1—0 |
| ஸ்ரீசுப்பிரமண்யசுவாமி திருக்கல்யாண கலைகு ப.ஊ. | 1—0 |
| ஸ்ரீசுப்பிரமண்யசுவாமி பேரின்பப் பதிகம் ... | 1—0 |
| பரப்பிர்மத்தின்பேரில் நிஜானந்தலகிரி ... ... | 1—0 |
| ஸ்ரீஆட்கொண்டார் கும்மி ... ... ... | 1—0 |
| வேலாயுதக்கவிராயர் பாடிய திருட்டுக்கும்மி ... | 1—0 |
| ஷையார் பாடிய தாதுஹூ ப்ஞ்சமீங்கிய கும்மி ... | 0—6 |
| ஸ்ரீநந்திகேசுவரர் சரித்திரம் ... ... ... | 0—6 |
| திருவையாறு ஸ்ரீதருமாம்பிகை பந்தடிப்பண் ... | 0—6 |
| மதுரை திருவிளையாடல் கோலாட்டக்கும்மி ... | 0—6 |
| எழுவங்கோட்டை வடக்குவாச்செல்விஅம்மன்கும்மி | 0—6 |
| திருவாரூர் ஸ்ரீதியாகேசர் பள்ளு ... ... | 0—6 |
| சுப்பிரமணியசுவாமி ஆனந்தக்களிப்பு ... ... | 0—6 |
| சிவநாமாவளி ... ... ... ... ... | 0—3 |

நா. வைத்தினாத பாரதி,

ஏஜண்டு, புஷ்யமண்டபத்தெரு

திருவாதி, தஞ்சாவூர் ஜில்லா.